# மலேசிய பிரதமர் திரு. டத்தோஸ்ரீ அன்வர் பின் இப்ராஹிமின் இந்திய பயணம் (ஆகஸ்ட் 19-21, 2024)

*ஆகஸ்ட் 18, 2024*

*இந்திய பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் அழைப்பின் பேரில், மலேசிய பிரதமர் திரு. டத்தோஸ்ரீ அன்வர் பின் இப்ராஹிம் அவர்கள் 2024 ஆகஸ்ட் 19 முதல் 21 வரை இந்தியாவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். மலேசியாவின் பிரதமராக H.E. திரு. அன்வர் இப்ராஹிம் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.*

*2. 2024 ஆகஸ்ட் 20 அன்று மலேசிய பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிம், குடியரசுத் தலைவர் மாளிகையின் முன்கோட்டத்தில் ஒரு சம்பிரதாய வரவேற்பைப் பெறுவார். பின்னர் மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ராஜ்காட்டுக்குச் செல்கிறார். அதன்பிறகு, அவர் பிரதமருடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்வார். அன்றைய தினம், அவர் இந்திய குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்திக்க உள்ளார். மேலும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. S. ஜெய்சங்கர் அவர்கள் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை சந்திப்பதற்கும் திட்டமிட்டுள்ளார்.*

*3. இந்தியாவும் மலேசியாவும் வலுவான வரலாற்று மற்றும் சமூக-கலாச்சார உறவுகளைக் கொண்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் மோடியின் வருகையின்போது, இருதரப்புகளின் உறவும் மேம்படுத்தப்பட்ட மூலோபாய கூட்டாண்மை என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது. அடுத்த ஆண்டு இரு நாடுகளும் மேம்படுத்தப்பட்ட மூலோபாயக் கூட்டாண்மையின் இரண்டாவது தசாப்தத்தில் நுழைவதால், மலேசிய பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிம் அவர்களின் இந்த வருகை எதிர்காலத்திற்கான பல்துறை ஒத்துழைப்பு நிகழ்ச்சி நிரலை வகுப்பதன் மூலம் இந்தியா-மலேசியா இடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த வழிவகுக்கும்.*

***புது தில்லி***
***ஆகஸ்ட் 18, 2024***